மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் நாள் செவ்வாய்கிழமை

அ.வ.எண். 112/22

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்:சுப்புலெட்சுமி | தேதி : 24.03.26 |
| வயது : | க/பெ : அய்யம்பெருமாள் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>24.03.26 குறுக்கு விசாரணை</u>

1.கைலாசம் பிள்ளை 6.75 செண்டினை அவரது மகளுக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ள சொத்தின் சர்வே எண் 711C மற்றும் 711D ஆகும். என் அம்மா பெயர் வள்ளியம்மாள். என் அம்மாவின் அப்பா பெயர் சுப்பையா பிள்ளை. கைலாசம் பிள்ளையின் வாரிசுகள் யார் என்றால் சுப்பையாபிள்ளை மற்றும் ராமலெட்சுமி அம்மாள். ராமலெட்சுமி அம்மாளுக்கு எத்தனை குழந்கைள் என்றால் 3 குழந்தைகள். அவர்கள் கணபதியா பிள்ளை, வள்ளியம்மாள், அபயந்தீர்த்தா பிள்ளை ஆகியோர் ஆவர்.

2.ராமலெட்சுமிக்கு 3 குழந்தைகள் இருக்கும்போது என் அம்மாவுக்கு மட்டும் தபசில் சொத்து எப்படி கிடைத்தது என்றால் வாரிசு படி என் பாட்டி சொத்து என் அம்மாவுக்கு கிடைத்து என் அம்மாவிடம் இருந்து எனக்கு கிடைத்தது. என் பாட்டி என் அம்மாவுக்கு தபசில் சொத்து தொடர்பாக ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் ஆம். என் பாட்டி என் அம்மாவுக்கு என்ன

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.25 21:02:08 +0530

ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் கிரையம் ஆவணம் எழுதிக்கொடுத்தார். எந்த வருடம் எழுதிக் கொடுத்தார் என்றால் 1932 ல் கிரையம் ஆவணம் எழுதிக்கொடுத்தார். எவ்வளவு இடம் எழுதிக்கொடுத்தார் என்றால் 3.5 செண்ட் எழுதிக்கொடுத்தார்.

3.கைலாசம் பிள்ளை என்பவர் யார் என்றால் ராமலெட்சுமி அம்மாளின் தந்தை ஆவார். வழக்குரையில் ராமலெட்சுமியின் தந்தை ராமலெட்சுமிக்கு 6.75 செண்ட் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 6.75 செண்டில் 3.25 செண்டை ராமலெட்சுமி அம்மாள் அவரது சகோதரர் சுப்பையாபிள்ளைக்கு 19.09.1969 ல் வாய்மொழியாக கொடுத்துவிட்டார். தபசில் சொத்தில் ராமலெட்சுமி அம்மாளின் தாயாருக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான்.

4.வழக்குரையில் 19.09.1969 ல் மேற்கண்டவாறு வாய்மொழியாக பிரித்து கொண்டதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1972 ல் பிறந்தேன். அதனால் 1969 ல் நடந்ததாக கூறும் வாய்மொழி பாகப்பிரிவினை சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தாத்தா, பாட்டி சொன்னார்கள். என் தாத்தா கைலாசம்பிள்ளை எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. அப்போது எனக்கு எத்தனை வயது என்றால் தெரியாது.

5.என் பாட்டி இறக்கும்போது எனக்கு எத்தனை வயது என்று தெரியாது. என் தாத்தா, பாட்டி இறந்த விபரம் தெரியாது என்றால் சரிதான். வழக்குரையில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.25 21:02:12 +0530

70 வருடங்களுக்கு முன்னதாக தபசில் சொத்தினை பொறுத்து பாகப்பிரிவினை நடந்ததாக சொன்னபோது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். ராமலெட்சுமி அம்மாள் எதற்காக 3.25 செண்டினை சுப்பையாபிள்ளைக்கு கொடுத்தார் என்றால் சுப்பையாபிள்ளையின் மூத்த மனைவி இறந்துவிட்டதாலும், 2 ம் மனைவிக்கு வீடு கிடையாததாலும் வாய்மொழியாக கொடுத்தார். மேற்படி விபரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6.வழக்குரையில் ராமலெட்சுமி தபசில் சொத்தினையும், அதனுடன் சேர்ந்த 6.75 செண்டினையும் அனுபவித்து வந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அப்படி தான் சொல்லப்பட்டுள்ளது. 2 ம் தபசில் சொத்தின் தென்வடல் 11.6 மீட்டர், கிழமேல் 5.5 அடி என்று நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணத்திலும் துலங்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 ஆவணத்தில் எந்த இடத்தில் 2 ம் தபசில் சொத்தின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அளவு பற்றி சொல்லப்படவில்லை.

7.1 ம் தபசில் சொத்தின் மேல்புறம் தான் 2 ம் தபசில் பாதை உள்ளதாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஏற்பாடு ஆவணத்தில் மேல்புற எல்கையாக பார்வதி அம்மாள் வீடு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ன் நான்கு மால் எல்கைகள் எந்த முன் ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் 1932 ம் ஆண்டு ஆவணத்தை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டது. வா.சா.ஆ 4 ஆவணம் 2 ம் தபசில் சொத்தினை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் அளிக்காது என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 21:02:14 +0530

8.நாங்களாக கற்பனையாக தென்வடல் பாதையாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 29.09.1969ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தில் இவ்வழக்கில் 2ம் தபசில் சொத்தின் நீளம், அகலம் பற்றி குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆம். 2ம் தபசில் சொத்து வருவாய் துறையில் உட்பிரிவு செய்யப்பட்டு பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1ம் தபசில் சொத்தின் நான்கு மால்கள் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் ஆம். வா.சா.ஆ 4 ஏற்பாடு ஆவணத்தில் 1ம் தபசில் சொத்துக்கு 4 மால் எல்கைகள் சொல்லப்பட்டுள்ளன என்றால் சரிதான்.

9.வழக்குரையில் 1ம் தபசில் சொத்துக்கு 4 மால் சொன்னால் 2ம் தபசில் சொத்து என்ற ஒன்று இல்லை என்று தெரிந்துவிடும் என்பதால் தான் அது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்திற்கு வடபுறம் பாதை உள்ளது என்றால் சரியல்ல. அதை தான் நான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. சண்முகத்தம்மாள் 1983ல் கிரையம் வாங்கிய ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த வருடம் பார்த்தேன் என்றால் 2007ல் பார்த்தேன்.

10.1983ம் ஆண்டு ஆவணத்தில் 2ம் தபசில் சொத்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். 2007ல் இருந்து தாவா வழக்கு தாக்கல் செய்யும் வரை பாதை காண்பிக்கப்படாதது குறித்து எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் தொடர்ந்து பிரச்சனை இருந்து வந்தது. அவ்வாறு பிரச்சனை இருந்து வந்தது என்பதை காண்பிக்க ஆவணம்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.25 21:02:18 +0530

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து என்ற பாதை இல்லை என்பதால் தான் நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல.

11.சண்முகத்தம்மாள் சுப்பையாபிள்ளையில் வாரிசுகளிடம் இருந்து தான் 1983ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து மேற்படி 1983ம் ஆண்டு கிரையம் ஆவணத்தில் கண்ட சொத்தின் ஒரு பகுதி என்றால் சரியல்ல. 1983ல் சண்முகத்தம்மாள் எவ்வளவு செண்ட் கிரையம் வாங்கினார் என்றால் 3.25 செண்ட் கிரையம் வாங்கினார். மேற்படி 3.25 செண்டிற்குள் தான் நான் பாதை என்று சொல்லும் இடம் உள்ளதாக கூறுகிறேன் என்றால் ஆம். 2ம் தபசில் பாதையை பயன்படுத்தி தான் 1ம் தபசில் சொத்திற்கு போகமுடியும் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12.என் சொத்தின் வடபுறம் உள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 712 ஆகும். வா.சா.ஆ12 மேல்முறையீட்டு தீர்ப்பாணை சர்வே எண் 711/2 ஐ பொறுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ12, 13 மேல்முறையீட்டு தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை தாவா வழக்கிற்கு தொடர்பற்றவை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ 12, 13 சர்வே எண் 711/2ல் உள்ள பஞ்சாயத்து பாதை சம்பந்தமானது ஆகும் என்றால் சரியல்ல. வருவாய் துறையில் 2ம் தபசில் சொத்து பொதுப்பாதை என்று குறிப்பிட்டு உட்பிரிவு செய்து தரக்கோரி மனு கொடுத்துள்ளேனா என்றால் ஆம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 21:02:20 +0530

13.எப்போது அவ்வாறு மனு கொடுத்தேன் என்றால் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய வரும்போது கொடுத்தேன். வா.சா.ஆ 4 ல் என் தாயார் வள்ளியம்மாள் அவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று தான் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2 ம் தபசில் பாதை என்ற ஒரு சொத்து கிடையாது என்றால் சரியல்ல. 2 ம் தபசிலை ஒருபோதும் நாங்கள் பாதையாக பயன்படுத்தியது கிடையாது என்றால் சரியல்ல. 2 ம் தபசில் சொத்து பிரதிவாதி சொத்தின் ஒரு பகுதி என்றால் சரியல்ல. அதனை பொறுத்து நான் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 ல் நாங்களாக பாதை என்று எழுதிக்கொண்டது பிரதிவாதியை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனவே தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 21:02:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.